# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8075257

1. District : மாவட்டம் VELLORE PS: காவல்நிலையம் V & A.C VELLORE Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 20/2020 Date: நாள் 15.12.2020

2. (i) Act சட்டம்: THE PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்: 7 & 12 of P.C Act 1988

   (ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED BY Sections பிரிவுகள்: as amended by the P.C

   (iii) Act சட்டம்: THE P.C (AMENDMENT) ACT 2018. Sections பிரிவுகள்: (Amendment) Act 2018

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : r/w. 102 Cr.P.C.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 14.12.2020

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை Prior to 17.50 Hrs.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.12.2020 Time நேரம் 14.30 Hrs AND 15.12.2020 12.00 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-II Time நேரம் 14.30 Hrs ON 14.12.2020 & 12.30 Hrs ON 15.12.2020.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ COMPUTER TYPED TAMIL COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் OFFICE OF THE SUB

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி REGISTRAR, VANIYAMBADI TIRUPATTUR DISTRICT. 67 KM SOUTH.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் DEPUTY INSPECTION CELL OFFICER. (g) Address : முகவரி OFFICE OF THE DISTRICT INSPECTION CELL, VELLORE COLLECTORATE, VELLORE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) G. KARTHIKEYAN AGE 47/2020, S/o. GNANAPRAKASAM, SUB REGISTRAR, VANIYAMBADI, TIRUPATTUR DIST., (2) Tr. J. ANBU, (28/2020) S/o JEGANATHAN, NO.10, ARINGER ANNA ST, METTUPALAYAM, VANIYAMBADI (3) Tr. D. PARANTHAMAN (30/2020) S/O. DHAKSHINAMOORTHY, NO. 224, PUTHUR CHAKRAMUTHIRAM, VANIYAMBADI (4) Tr. C. BABU (52/2020) S/o. CHINNARAJ 15/8, OFFICER'S LINE, METTUPALAYAM VANIYAMBADI.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் NO DELAY

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15-12-2020 at 13.30Hrs

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் ..........
VIGILANCE AND ANTI CORRUPTION, VELLORE.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்று 15.12.2020-ஆம் தேதி காலை 12.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலராக உள்ளேன். நேற்று 14.12.2020-ஆம் தேதியன்று பகல் சுமார் 14.00 மணியளவில், நான் அலுவலகத்தில் இருந்தபோது. திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரியும் திரு.கார்த்திகேயன் என்பவர் பத்திரப்பதிவுகளை மேற்கொள்வதற்காக ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களை கட்டாயப்படுத்தி லஞ்சமாக பணத்தை வசூல் செய்வதாகவும், அதிலும் குறிப்பாக இடைத்தரகர்களான அன்பு மற்றும் பாபு ஆகியோர்கள் மூலமாக லஞ்சப்பணத்தை வசூல் செய்யும் மேற்படி பணத்தை தற்காலிகமாக வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள ஆவண எழுத்தர் தட்சிணாமூர்த்தி என்பவரின் அலுவலகத்தில் அவரது மகன் பரந்தாமன் என்பவரிடம் கொடுத்து வைப்பதாகவும், சார் பதிவாளர் அவர்கள் அலுவலக நேரத்தில் இடையிடையே அதனை பெற்றுக்கொள்வதாகவும், வசூல் செய்யப்பட்ட மீதமுள்ள தொகையை சார் பதிவாளர் வீட்டிற்கு செல்வதற்கு முன்பாக அன்பு மற்றும் பிற இடைதரகர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு சிகப்பு நிற Chevrolet Beat LS Regn.No.TN 73 B 3331 என்ற காரில் லஞ்சப்பணத்துடன் வீட்டிற்கு போவதாக நம்பகமான தகவல் கிடைத்தது. கிடைக்கப்பெற்ற தகவலை தகவலாளர்கள் மூலம் ஊறுதி செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.விஜய் அவர்களுக்கு தெரியபடுத்திய பின்னர் 14.12.2020-ஆம் தேதி பகல் சுமார் 15.15 மணியளவில் நான் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் அரசு வாகனத்தில் புறப்பட்டு, மேற்படி வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 16.30 மணிக்கு வாணியம்பாடி சென்று சேர்ந்து, வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தை குழுவினருடன் கண்காணிக்கப்பட்டது. அப்போது பொது மக்கள் ஏராளமானோர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளேயும், அலுவலக வளாகத்திற்கு உள்ளேயும் காத்திருந்தனர். தொடர்ந்து அவ்வாறு கண்காணித்ததில் குறிப்பிட்ட சில நபர்கள் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே செல்வதும், மீண்டும் வெளியே வந்து பொது மக்களிடம் பேசிவிட்டு மீண்டும் அலுவலகத்திற்கு உள்ளே செல்வதுமாக

இருந்தனர். சார் பதிவாளர் அலுவலகத்தின் சார் பதிவாளர் அவர்களின் அறையின் ஜன்னல் வழியாக கண்காணித்தபோது, சார் பதிவாளர் அவரது இருக்கையில் அமர்ந்து இருந்தவர் அலுவலகத்திற்கு உள்ளேயே வேறு பகுதிக்கு செல்வதும், மீண்டும் அவரது இருக்கைக்கு வந்து அமர்வதுமாக இருந்தார். மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து, கிடைக்கப்பெற்ற தகவலை மீண்டும் தகவலர்கள் மூலம் உறுதி செய்து கொண்டு மாலை சுமார் 17.50 மணிக்கு சார் பதிவாளர் அலுவலக வளாகத்திற்குள் திடீர் இருதுறை கூட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. வாணியம்பாடி சார் பரிவாளர் அவர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, சார் பதிவாளர் திரு.கார்த்திகேயன் அவர்களை சோதனை செய்ய, அவரது சட்டையின் மேல் பாக்கெட்டில் ரூ.400/- இருந்தது. அப்பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார், அதனால் அப்பணம் ரூ.400/- கைப்பற்றப்பட்டது. மேலும், சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த 1) திரு.B.உமாபதி, த/பெ பாலகிருஷ்ணன், உதவியாளர் 2) திருமதி.P.அருணா, க/பெ மகாதேவன், உதவியாளர், 3) திருமதி.A.சுதா க/பெ நாராயணன், இளநிலை உதவியாளர், 4) திரு.M.ரகுநாதன், த/பெ முனிசாமி, பதிவறை எழுத்தர் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் பணியமர்த்தப்பட்ட கணினி இயக்குபவர்கள், புகைப்படம் எடுப்பவர்கள் மற்றும் ஆவணங்களை ஒலிவருடல் செய்பவர்களான 5) திரு.R.ராஜேஷ், த/பெ ராஜேந்திரன், 6) திருமதி.G.சங்கீதா, க/பெ சந்திரசேகரன், 7) திரு.C.வடிவேலு, த/பெ சந்திரசேகரன், 8) திரு.V.சதிஷ் குமார், த/பெ வெங்கடேசன், 9) திருமதி.P.செல்வி, க/பெ ரவி மாதேஷ்வரன், ஆகியோரை சோனை செய்து அவர்கள் வசம் இருந்த பணம் குறித்து விசாரித்து தக்க முகாந்திரம் தெரிவித்தமையால் அவர்களிடமே அத்தொகைகள் திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.கார்த்திகேயன், சார் பதிவாளர் அவர்களிடம் இரு துறை திடீர் சோனை நடைபெற்றுக்கொண்டிருந்த நேரம் வரையில் எவ்வளவு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தான பதிவுகள் "A" Account கணக்கை பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்ததை பார்வை செய்து கைப்பற்றப்பட்டது. பின்னர், வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்களை 1) திரு.G.ராஜீ, த/பெ.கோவிந்தராஜ் நாயுடு, நெ.1/97C, மாரியம்மன் கோயில் தெரு, திம்மாம்பேட்டை கிராமம் & அஞ்சல், வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை, 2) திரு.G.திருஞானம் த/பெ.காந்திநேசன், நெ.52, எக்லாஸ்புரம், வ.உ.சி தெரு, வடக்குபட்டு அஞ்சல், ஆம்பூர் வழி, நாட்றாம்பள்ளி தாலுக்கா, (ஆவண எழுத்தர் திரு.ராஜீ அவர்களின் உதவியாளர்) என்பவரை சோதனை செய்ய அவர் வசம் ரூ.750/- இருந்தது, 3) திரு.P.கார்த்திகேயன், த/பெ.பார்த்தீபன், நெ.2/21, பிள்ளையார் கோயில் தெரு, பாப்பனபள்ளி கிராமம், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் (ஆவண எழுத்தர் திரு.மகேந்திரன் அவர்களின் உதவியாளர்) என்பவரை சோதனை செய்ய

அவர் வசம் பணம் ஏதும் இல்லை. 4) திருமதி.D.உமாதேவி க/பெ.துரைராஜ், ஆபிசர்ஸ் லைன், மேட்டுப்பாளையம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் (ஆவண எழுத்தர் திரு.ராஜீ அவர்களிடம் தட்டச்சராக பணிபுரிபவர்) அவர்களை சோதனை செய்ய அவர் வசம் பணம் ரூ.4,200/- இருந்தது. மேற்சொன்ன ஆவண எழுத்தர்கள் மற்றும் ஆவண எழுத்தர்களின் உதவியாளர்களிடம் அவர்கள் வசம் இருந்த பணம் குறித்த விசாரிக்க அவர்கள் தக்க முகாந்திரம் மற்றும் தங்கள் வசம் உள்ள தொகை குறித்து முறையாக கணக்கு கூறியதால் அத்தொகை அவர்கள் வசம் திருப்பிகொடுக்கப்பட்டது. மேலும் 5) திரு.C.குமரன், த/பெ.சந்திரசேகர், நெ.2/18, பிள்ளையார் கோயில் தெரு, பாப்பனபள்ளி, ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் (ஆவண எழுத்தர் திரு.கஜேந்திரன் அவர்களிடம் வேலை செய்பவர்) அவர்களை சோதனை செய்ய அவர் வசம் பணம் ரூ.2,000/- இருந்தது அத்தொகை குறித்து உரிய கணக்கு கூறாத காரத்தாலும், தக்க முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து அலுவலகத்திற்குள் ஆஜரில் இருந்த 6) திரு.R.சுரேஷ், த/பெ.ரவி, நெ.597, அரசமர வீதி, ஆம்பூர்பேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் ரூ.10,320/-ம், 7) திரு.N.யோகேஷ், த/பெ.வெங்கடேஷ் மூர்த்தி, நெ.50, M.S.V. கேபின் ஆபிஸ் ரோடு, அம்ருத்ஹள்ளி, பெங்களூர், கர்நாடக மாநிலம் என்பவரிடம் ரூ.2,260/-ம், 8) திரு.கௌரிகுமார், த/பெ.பலராமன், நெ.9A, காந்தி ரோடு, வளத்தியூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் ரூ.2,560/-ம் 9) திரு.பெருமாள், த/பெ.ஆண்டி கவுண்டர், கூத்தாண்டகுப்பம், ஜீவா நகர், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் பணம் ஏதும் இல்லை. 10) திரு.P.கோவிந்தராஜ், த/பெ.பெருமாள், நெ.259, நாராயணபுரம் கிராமம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் ரூ.520/-ம் 11) திரு.K.பாலாஜி, த/பெ.கேசவன், நெ.737, அம்பேத்கார் தெரு, கோவிந்தாபுரம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் ரூ.670/- 12) திரு.R.ராம்குமார், த/பெ.ராமகிருஷ்ணன், நெ.66/263, தகரகுப்பம் கிராமம், நாட்றாம்பள்ளி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம், என்பவரிடம் ரூ.48,800/-ம், 13) திரு.L.வாசுதேவன், த/பெ.லோகநாதன், நெ.129, வெங்களாபுரம் அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் ரூ.40,000/-ம் இருந்தது அத்தொகைகள் குறித்து தக்க முகாந்திரம் மற்றும் கணக்கு கூறிய காரணத்தால் அவர்களிடமே அவர்களுக்குரிய அத்தொகை திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் 14) திருமதி.லலிதா, க/பெ.மீனாட்சி சுந்தரம், நெ.196, இந்திரா நகர், பகுதி-1, மலையடி ஓரம், சத்துவாச்சாரி, வேலூர் மற்றும் 15) திருமதி.நந்தினி, க/பெ.பாலகிருஷ்ணன், நெ.130, ஆசிரியர் நகர், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் ஆகியோரை சோதனை செய்ய அவர்கள் வசம் பணம் ஏதும் இல்லை. மேற்படி சார் பதிவாளர், வாணியம்பாடி அலுவலகத்தில் இருந்த இடைதரகர்களான 1) திரு.C.பாபு, த/பெ.சின்னராஜ், நெ.15/8, ஆபிசர்ஸ் லைன், மேட்டுப்பாளையம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம், என்பவரை சோதனை

செய்ய அவரது சட்டையின் மேல் பாக்கெட்டில் பணம் ரூபாய் 530/- இருந்தது, அப்பணம் குறித்து கேட்க அவர் அப்பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதால் அத்தொகை அவர் வசமே திருப்பிகொடுக்கப்பட்டது.

2) திரு.J.அன்பு, த/பெ.ஜெகன்னாதன், நெ.10, அறிஞர் அண்ணா தெரு, மேட்டுப்பாளையம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம், என்பவரை சோதனை செய்ய அவரது பேன்டின் வலது பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது, எவ்வளவு தொகை உள்ளது என்பது பற்றி அவரிடம் கேட்க தன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது என்பது பற்றி தனக்கு தெரியாது என்று கூறினார், மேலும் அப்பணம் வைத்திருந்தமைக்கான விளக்கத்தினை கேட்க அவர் பதில் ஏதும் சொல்லாமல் இனிமேல் இதுபோன்று செய்யமாட்டேன் என்று கூறினார். அப்பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.8,450/- இருந்தது. தக்க மூகாந்திரம் கூறாத மற்றும் கணக்கு காட்ட இயலாத அப்பனம் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.அன்பு த/பெ.ஜெகன்னாதன் அவர்களிடம் பரந்தாமன் யார் என்று கேட்க அவர் வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே இருந்த திரு.தட்சிணாமூர்த்தி என்ற ஆவண எழுத்தரின் அலுவலகத்தை காட்டி அதுதான் பரந்தாமன் அலுவலகம் என்றும் அங்கு நின்று கொண்டிருந்த நபரை பரந்தாமன் என்றும் அடையாளம் காட்டினார். சுமார் 50 மீட்டர் தொலைவில் இருந்த அவ்விடத்திற்கு சென்று அன்பு அடையாளம் காட்டிய நபரை விசாரிக்க அவர் தன் பெயர் பரந்தாமன் என்றும் தன்னுடைய தந்தை பெயர் தட்சிணாமூர்த்தி ஆவண எழுத்தர் என்றும் கூறினார். அவரிடம், அன்பு என்பவரை தெரியுமா என்று விசாரிக்க அவர் தனக்கு தெரியும் என்றும் ஆவண எழுத்தர்களுக்கும் சார் பதிவாளருக்கும் தேவையான வேலைகளை செய்பவர் என்று கூறினார். ஆவண எழுத்தர் திரு.தட்சிணாமூர்த்தி அவர்களின் மகன், திரு.D.பரந்தாமன், த/பெ.தட்சிணாமுர்த்தி, நெ.224, புதூர், கிரிசமுத்திரம், வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம், என்பவரிடம் அன்பு த/பெ.ஜெகன்னாதன் இன்று பணம் ஏதும் வசூல் செய்து உங்களிடம் கொடுத்துள்ளாரா என்பது குறித்து கேட்க அவர் வழக்கமாக தினமும் ஆவண எழுத்தர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து வசூல் செய்யும் பணத்தை எடுத்து வந்து அலுவலகத்தில் வைப்பார் பின்னர் மாலை நேரத்தில் வந்து எடுத்து சென்றுவிடுவார் இன்றும் அதுபோல் தங்கள் அலுவலகத்தில் பணத்தை வைத்திருந்தார் ஆனால் அதனை அவர் ஏற்கனவே வந்து எடுத்து சென்றுவிட்டார் என்று கூறினார். மேலும் தன்னிடம் அலுவலகத்தில் தன்னுடைய சொந்த பணம் ரூபாய் 15,000/- உள்ளதாகவும் மேலும் இன்றைய தினம் திரு.அன்பு ஜோதி என்பவர் ரூபாய் 26,000/- ஆவண பதிவு செய்தமைக்காக தன்னிடம் கொடுத்துள்ளார் என்றும், மேலும் 16.12.2020 அன்று மேற்கொள்ளவுள்ள பதிவு சம்மந்தமாக வேலுமணி என்பவர் ரூபாய் 10,000/- கொடுத்துள்ளதாகவும், ஆக மொத்தம் பணம் ரூபாய் 51,000/- உள்ளதாக தெரிவித்தார், மேற்சொன்ன தகவல்களை திரு.அன்பு ஜோதி மற்றும் திரு.வேலுமணி ஆகியோரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு அத்தகவலை உறுதி செய்த

பின்னர் அத்தொகை ரூபாய்.51,000/-, திரு.பரந்தமான் வசம் திருப்பிகொடுக்கப்பட்டது. மேற்படி நபரை அங்கிருந்து வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்துவந்து சோதனை செய்ய, அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் பணம் கத்தையாக இருந்தது. அந்த பணம் குறித்து விசாரிக்க அவர் வசம் எவ்வளவு பணம் இருந்தது என்று தெரிவிக்க அவரால் கூற இயலவில்லை. மேலும், அப்பணம் குறித்து கேட்க திரு.செல்வநாதன் என்பவர் தன்னிடம் கொடுத்த பணம் என்று தெரிவிக்க திரு.செல்வநாதன் அவர்களை தொடர்பு கொண்டு கேட்க அவர் தான் பணம் ஏதும் பாரந்தாமனுக்கு கொடுக்கவில்லை என்று கூறினார், அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் ஏதும் கூறாத காரணத்தாலும் கணக்கு காட்டமுடியாத அந்த தொகை ரூ.6,920/- கைப்பற்றப்பட்டது. மேலும் வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலக ஹாலில் தென் மேற்கு மூலையில் கண்ணாடி தடுப்புகளால் ஆன Old Document Scanning Room உள்ளது, அந்த கேபினை சோதனை செய்ய அதில் இருந்த மரபெட்டியின் மேல் மூன்று தலையனைகள் இருந்தது அதனை எடுத்துபார்க்க அவற்றிக்கு நடுவே கத்தையாக பணம் இருந்தது, அப்பணம் குறித்து சார் பதிவளார் மற்றும் ஊழியர்களை விசாரிக்க அவர்கள் பதில் ஏதும் கூறாமல் அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அதனை எடுத்து எண்ணிப்பார்க்க ருபாய் 20,000/- இருந்தது யாரும் உரிமை கோரத அத்தொகை கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக ஹாலின் வடக்கு திசையில் சுமார் 10X5 அடி அளவுள்ள டைனிங் ரூம் உள்ளது. டைனிங் ரூமை அடுத்து கழிவறை உள்ளது, அந்த கழிவறைக்கு செல்லும் வழியில் இடதுபக்க சுவற்றை ஒட்டி வைக்கப்பட்டுள்ள டேபிளுக்கு அடியில் பணம் இருந்தது அதை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூபாய் 1,610/- இருந்தது அது குறித்து சார் பதிவாளர் மற்றும் ஊழியர்களிடம் விசாரிக்க யாரும் அப்பணத்திற்கு உரிமை கோராத காரணத்தால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி டேபிளுக்கு அருகில் இருந்த HP Printer இருந்த காலி அட்டை பெட்டியை சோதனை செய்ய அதில் தேவையற்ற காகித தாள்களுக்கு இடையில் பணம் கத்தையாக இருந்தது அதை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூபாய் 11,000/- இருந்தது அது குறித்து சார் பதிவாளர் மற்றும் ஊழியர்களிடம் விசாரிக்க யாரும் அப்பணத்திற்கு உரிமை கோராத காரணத்தால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள் மூலமாக வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலக பணியாளர்களின் தனி நபர் பணம் இருப்பு பதிவேடு கேட்டுப்பெற்று அதில் சார் பதிவாளார் அவர்களிடம் இருந்த பணத்திற்கும் பதிவேட்டில் இருந்த பணத்திற்கும் உள்ள முறன்பாடுகள் குறித்து விசாரித்து சார் பதிவாளர் ஆஜர் செய்த ருபாய் 1,600/- திரு.கார்த்திகேயன் வசமே திருப்பிகொடுக்கப்பட்டது. மேலும் ஏற்கனவே அவர் வசமிருந்து கைப்பற்றப்பட்ட ரூபாய் 400/- குறித்து விசாரிக்க அவர் மீண்டும் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தார், அப்பதிவேடு வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார் பதிவாளர் திரு.கார்த்திகேயன் என்பவரிடம் வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலக அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு,

Date Entry Operator Attendance Register, IP Camera Operator Attendance Register ஆகியவற்றை கேட்டுப்பெற்று அதனை பார்வை செய்து வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. மேலும் “A” Account கணக்கை பிரிண்ட் அவுட் எடுத்து கொடுக்க கைப்பற்றப்பட்டது. பின்னர் வாணியம்பாடி சார் பதிவாளர் அலுவலக வளாகத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN-73-B-3331 என்ற பதிவு எண் கொண்ட Chevrolet Beat சிகப்பு கலர் காரினை சார் பதிவாளர் திரு.கார்த்திக்கேயன் அவர்களின் முன்னிலையில் சோதனை செய்ய மேற்படி காரின் Dash Board-ல் கத்தையாக பணம் இருந்தது, அப்பணம் குறித்து திரு.கார்த்திகேயன் அவர்களிடம் விசாரிக்க அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் அது தன்னுடைய பணம் இல்லை என்றும் கூறினார், அப்பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க ரூபாய் 24,000/-இருந்தது, தக்க முகாந்திரம் கூறாத, கணக்கு காட்ட இயலாத மற்றும் உரிமை கோராத அப்பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் காரின் ஓட்டுனரின் இருக்கையின் பக்கத்தில் உள்ள இருக்கையின் பின்புறம் உள்ள சீட் கவரில் கத்தையாக பணம் இருந்தது, அப்பணம் குறித்து திரு.கார்த்திகேயன் அவர்களிடம் விசாரிக்க அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் அது தன்னுடைய பணம் இல்லை என்றும் கூறினார், அப்பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க ரூபாய் 20,000/-இருந்தது, தக்க முகாந்திரம் கூறாத, கணக்கு காட்ட இயலாத மற்றும் உரிமை கோராத அப்பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி காரின் அருகில் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனங்களை சோதனை செய்ய அதில் பணம் ஏதும் இல்லை. முன்னாள் படைவீரர் கொடிநாள் வசூல் தொகை குறித்து சார் பதிவாளர் அவர்களிடம் விசாரித்து அவர் ஆஜர் செய்த கடித ந.க.எண்.359/2020, நாள்:10.11.2020 என்ற கடிதம் கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத, கணக்கு காட்ட இயலாத மற்றும் யாரும் உரிமை கோராத பணம் ரூ.94,380/- மற்றும் ஆவணங்கள் வழக்கு நிமிர்த்தமாக கைப்பற்றப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான விரிவான செயல்முறை 14.12.2020 மாலை 17.50 மணி முதல் தயார் செய்யப்பட்டு 15.12.2020 ஆம் தேதி 01.30 மணிக்கு முடிக்கப்பட்டு அதன் நகல் திரு. G.கார்திகேயன், சார் பதிவாளர், வாணியம்பாடி அவர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. திரு.G. கார்த்திகேயன், த/பெ ஞானப்பிரகாசம், சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், வாணியம்பாடி, வேலூர் பதிவு மாவட்டம், திருப்பத்தூர் மாவட்டம், தனது பதவியை அதிகார துஷ்பிரயோகம் செய்து ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோர் மூலம் பொது மக்களிடம் இருந்து லஞ்சமாக பணத்தை இடைதரகர்களான C.பாபு, த/பெ.சின்னராஜ், நெ.15/8, ஆபிசர்ஸ் லைன், மேட்டுப்பாளையம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம், திரு.J.அன்பு, த/பெ.ஜெகன்னாதன், நெ.10, அறிஞர் அண்ணா தெரு, மேட்டுப்பாளையம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் திரு.D.பரந்தாமன், த/பெ.தட்சிணாமுர்த்தி, நெ.224, புதூர், கிரிசமுத்திரம், வாணியம்பாடி தாலுக்கா,

திருப்பத்தூர் மாவட்டம், ஆகியோர் மூலம் கட்டாய பணவசூல் செய்து லஞ்சமாக கேட்டு பெற்றுக்கொண்ட திரு.G. கார்த்திகேயன், த/பெ ஞானப்பிரகாசம், சார் பதிவாளர், வாணியம்பாடி, ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.94,380/-யும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் உரிய நடவடிக்கைக்காக ஒப்புவிக்கிறேன். ஒம்/-xxxxxxxxxxx (S.ஜோதி) 15/12/2020 மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Inspector Tr. S.Vijay, receive the complaint and register a case Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 15.12.2020, DSP/VAC/Vellore.

Sir/Madam, Received the complaint and registered a case in Vellore V & A.C., Cr.No.20/2020, u/s. 7 & 12 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w. 102 Cr.P.C., on 15.12.2020 at 12.30 hrs. Sd/- xxxxxxxxxxx (S.VIJAY) 15/12/2020, INS/VAC/VLR.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

15/12/2020
(S.VIJAY)
Ins/VAC/VLR.

திருப்பத்தூர் மாவட்டம், ஆகியோர் மூலம் கட்டாய பணவசூல் செய்து லஞ்சமாக கேட்டு பெற்றுக்கொண்ட திரு.G. கார்த்திகேயன், த/பெ ஞானப்பிரகாசம், சார் பதிவாளர், வாணியம்பாடி, ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.94,380/-யும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் உரிய நடவடிக்கைக்காக ஒப்புவிக்கிறேன். ஒம்/-xxxxxxxxxxx (S.ஜோதி) 15/12/2020 மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Inspector Tr. S.Vijay, receive the complaint and register a case Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 15.12.2020, DSP/VAC/Vellore.

Sir/Madam, Received the complaint and registered a case in Vellore V & A.C., Cr.No.20/2020, u/s. 7 & 12 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w. 102 Cr.P.C., on 15.12.2020 at 12.30 hrs. Sd/- xxxxxxxxxxx (S.VIJAY) 15/12/2020, INS/VAC/VLR.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

15/12/2020

(S.VIJAY)
Ins/VAC/VLR.